அதிகரிக்கும். ஆதலால், ரங்கர்கோவில் அருகே தடுப்பணை ஒன்றை அமைத்துக் கொடுத்து உதவிடுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்கு நீங்கள் தனிக் கேள்வி போட வேண்டும்.

வினா வரிசை எண் 176, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

176—

வீட்டுமனைப் பட்டா

***7818—திரு. பி. மூர்த்தி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை கிழக்குத் தொகுதி, சக்கிமங்கலம் ஊராட்சி, எல்.கே.பி. நகர், மாரியம்மன் கோயில் தெருவில் வசிக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மதுரை கிழக்குத் தொகுதி, சக்கிமங்கலம் ஊராட்சி, எல்.கே.பி. நகர், மாரியம்மன் கோயில் தெருவில் வசிக்கும் மக்களுக்கு சுமார் 250 அனுமந்தப் பட்டாக்கள் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளன. மேலும், மேற்படி பகுதிகளில் வசிக்கும் பட்டா இல்லாத மக்களுக்கு அரசு விதிகளின்படி பட்டா வழங்க விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி அவர்கள்.

திரு. பி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை கிழக்குத் தொகுதி, சக்கிமங்கலம் ஊராட்சி, எல்.கே.பி. நகர்,

மாரியம்மன் கோயில் தெருவில் வசிக்கும் மக்களுக்கு 250 அனுமந்தப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. மதுரை மாநகராட்சியில் ஆக்கிரமிப்புகளை அகற்றி, அங்கே குடியிருந்தவர்களுக்கும் இங்கே அனுமந்தப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. மேலும், அந்தப் பகுதியில் சர்வே எண் 43/2–ல் தீர்வைப்படுத்தாத தரிசு நிலம் இருக்கிறது. அந்தப் பகுதியைப் பொறுத்தளவில், தாழ்த்தப்பட்ட, சிறுபான்மையின, பிற்படுத்தப்பட்ட ஏழையெளிய மக்கள் அதிகமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். எனவே, அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்களுக்கு முன்னுரிமை அளித்து பட்டா வழங்கப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். மேலும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மற்றொரு கேள்வி கேட்க வாய்ப்புத் தரப்படும், உட்காருங்கள். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை கிழக்கு வட்டம், சக்கிமங்கலம் உள்வட்டம், சக்கிமங்கலம் 2–வது பீட் கிராமத்தில் எல்.கே.பி. நகர் பகுதியிலுள்ள மாரியம்மன் கோயில் தெருவில் வசிக்கும் பொதுமக்களுக்கு மதுரை கிழக்கு வட்டம், ஒருங்கிணைந்த மதுரை வடக்கு வட்டமாக இருந்தபோது, மேற்படி கிராமப் புல எண்கள் 43/5 மற்றும் 43/6 ஆகியவற்றில் 2013–2014 ஆம் ஆண்டில் அனுமந்தப் பட்டா 250 நபர்களுக்கு தகுதியின் அடிப்படையில் வழங்கப்பட்டது. அன்றைக்கு இந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இருந்த அருமைச் சகோதரர் திரு. தமிழரசன் அவர்கள் வைத்த கோரிக்கையின் அடிப்படையில், புரட்சித் தலைவி அம்மா அவர்களால் போர்க்கால அடிப்படையில் அறிவிப்பு வெளியிடப்பட்டு அவர்களுக்குப் பட்டா வழங்கப்பட்டது.

முற்பகல் 10–40

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, அவர்களெல்லாம் நாடக நடிகர்கள், ஜோதிடம் பார்ப்பவர்கள், நரிக்குறவர்கள், பூம்பூம் மாட்டுக்காரர்கள் என்று சமுதாயத்தினுடைய மிகவும் பின் தங்கிய நிலையிலே இருக்கக்கூடியவர்கள், பொருளாதார நிலையிலே பின்தங்கியிருக்கக்கூடியவர்கள். பொதுவாக இலவச வீட்டுமனைப் பட்டா என்பது ஏழைகளாக உள்ளவர்களுக்கும், வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கும் வழங்கப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாக அறிவார்கள்.

தற்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, அந்தப் பகுதியிலே புதிதாகக் குடியேறியிருப்பவர்கள் வீட்டுமனைப் பட்டா கேட்டு விண்ணப்பம் செய்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களே தரிசு நிலம் இருக்கின்ற சர்வே எண் முதற்கொண்டு இங்கே சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, புதிதாகக் குடியேறி மனு செய்திருக்கின்ற அந்த மக்களுடைய மனுக்களையும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பரிந்துரை செய்திருக்கிறார்கள். உரிய ஆய்வு செய்து அரசின் விதிமுறைகளுக்குட்பட்டு தகுதியுடையவர்களுக்கு பட்டா வழங்குவதற்கு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி அவர்கள்.*

திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 250 பட்டாக்களை ஆய்வு செய்து, அனுமந்தப் பட்டாவை தோராயப் பட்டாவாக வழங்குவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்திலேகொள்ள வேண்டும். மேலும் எங்களுடைய மதுரை வடக்குத் தாலுகா, மேற்கு ஒன்றியம், மஞ்சம்பட்டி ஊராட்சியிலே, சீகுபட்டி கிராமத்தில் சர்வே எண் 8/1–ல் ஒரு ஏக்கர் 62 சென்ட், சர்வே எண் 14 மற்றும் சர்வே எண் 15/2–ல் 6 ஏக்கர் 12 சென்ட்டு நிலத்தில் 30–6–2013 அன்று 172 பேர்களுக்கு, நகர்ப்புறத்திலே இருப்பவர்களுக்குப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. மேலும், மஞ்சம்பட்டி ஊராட்சி மட்டுமல்ல, அருகிலே இருக்கக்கூடிய சத்திரப்பட்டி ஊராட்சியாக இருந்தாலும், பெரியபட்டி ஊராட்சியாக இருந்தாலும், சின்னபட்டி ஊராட்சியாக இருந்தாலும், ஏழையெளிய பின்தங்கிய மக்கள் அதிகமான அளவிலே இருக்கிறார்கள். அந்த சர்வே எண்களிலே இருக்கக்கூடிய அவர்களுக்கு முன்னுரிமைக் கொடுத்து ஏற்கெனவே 172 பட்டா கொடுத்தது போக, எஞ்சியிருக்கக்கூடிய அந்த நிலங்களிலே பட்டா வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

2017 ஜூலை 11]

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனுமந்தப் பட்டா என்பது வேறு ஒன்றுமில்லை. ஓராண்டுக் காலத்திற்குள்ளாக அவர்கள் வீடு கட்ட வேண்டுமென்கின்ற நிபந்தனையோடு வழங்குகின்ற பட்டா. அந்த 250 பேர்களிலே 200 பேர்கள் அதிலே வீடு கட்டிவிட்டார்கள். 50 பேர்கள் மட்டும்தான் வீடு கட்ட வேண்டியிருக்கிறது. ஆகவே, அவர்கள் வீடு கட்டி முடித்தவுடன் அவர்களுக்கு ரெகுலர் பட்டா வழங்கப்படுகிறது. அதேபோல, மஞ்சம்பட்டி பகுதியிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை கவனத்தில் கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, அவர்களுக்கும் பட்டா வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ் அவர்கள்.*

திரு. ஆர். கணேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் நீலகிரி மாவட்டத்தில், சுமார் 80,000 ஈழுவத்தியா மலையாள மக்கள் இருக்கிறார்கள். தமிழ்நாடு முழுவதும் மலையாளம் பேசும் மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு* B.C. Certificate *கொடுத்தவுடன், அடுத்த 2 மாதங்களில்* invalid *என்று சொல்லி திரும்ப வாங்கிக்கொள்கிறார்கள். மலை வேடர் இன மக்களுக்கு* S.T. Certificate *கொடுத்து திரும்ப வாங்கிக்கொள்கிறார்கள். அதற்கு என்ன காரணம் என்று எங்களுக்குத் தெரியாது. அவர்களுக்குச் சான்றிதழ் கொடுக்கிறீர்கள். அதைத் திரும்ப வாங்கிக்கொள்வதால் குழந்தைகள் படிப்பு பாதிக்கப்படுகிறது. சாதிச் சான்றிதழ் இல்லாமல், பள்ளிகளில் சேர்க்க முடியாமல் நிறைய பேர் சிரமப்படுகின்றனர். ஈழுவத்தியா மக்களாக இருந்தாலும் சரி, மலைவேடர் இன மக்களாக இருந்தாலும் சரி, மலையாள மக்களாக இருந்தாலும் சரி, சான்றிதழ் கொடுத்துவிட்டு ஏன் திரும்ப வாங்குகிறீர்கள்? அவர்களுக்கு நிரந்தரமான ஒரு தீர்வை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பழங்குடியினருக்கு சாதிச் சான்றிதழ் வழங்குவதைப் பற்றி இங்கேயொரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். குறிப்பாக, இதுபோன்று S.T. சான்றிதழ் வழங்குவதற்கென்று ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. கோட்டாட்சியர் அவர்களுடைய தலைமையிலே முழுமையாக ஆய்வு செய்த பின்னர்தான் சான்றிதழ் வழங்கப்படுகிறது. கொடுக்கப்பட்டிருக்கின்ற சான்றிதழ் திரும்பப் பெறப்பட்டதாகத் தகவல் ஏதுமில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன தகவல் உடனடியாக ஆய்வு செய்யப்படும். அந்த மாதிரி ஏதேனும் ஓரிடத்தில் இருக்குமானால், அதைக் குறிப்பிட்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். இதுவரை கொடுக்கப்பட்ட சான்றிதழ் திரும்பப் பெறப்படவில்லை. கொடுப்பதற்கு முன்பாக பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. சில நேரங்களிலே அதனால்தான் காலதாமதமாகிறது என்கின்ற குறைபாடும் சொல்லப்படுகிறது. முழுமையாக ஆய்வு செய்யப்பட்டதற்குப் பின்னால் தரவேண்டுமென்ற அடிப்படையிலேதான் நீண்ட ஆய்விற்குப் பிறகு சான்றிதழ் தரப்படுகிறது. ஆகவே, கொடுக்கப்பட்டிருக்கின்ற சான்றிதழ் அரசின் மூலமாகத் திரும்பப் பெறப்படுகிறது என்கின்ற தகவலை, உடனடியாக ஆய்வு செய்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அம்பேத்குமார் அவர்கள்.*

திரு. எஸ். அம்பேத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருங்காலத் தமிழகத்தை வழிநடத்தவிருக்கும் எங்கள் செயல் தலைவர், வணக்கத்துக்குரிய அண்ணன் தளபதியார் அவர்களை வணங்குகிறேன். திருவண்ணாமலை சட்டமன்றப் பேரவை உறுப்பினர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.*

2017 ஜூலை 11]

வந்தவாசி தொகுதிக்குட்பட்ட வந்தவாசி நகரில் 4–வது வார்டில் சவுடேரிப்பாளையம் என்ற பகுதி உள்ளது. அந்தப் பகுதியில் சுமார் 50 வருடங்களாக 150–க்கு மேற்பட்ட வீடுகளில் மக்கள் வசித்து வருகின்றனர். அவர்களுக்கு நமது அரசாங்கத்தின் சார்பில் சாலை வசதிகள், மின்சார வசதிகள், கால்வாய் வசதிகள் போன்ற அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. சுமார் 50 வருடங்களாகவே அவர்கள் பட்டா வழங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்து வருகின்றனர். அவர்களுக்கு இந்த அரசு பட்டா வழங்க ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இலவச வீட்டுமனைப் பட்டாவைப் பொறுத்தளவிலே, ஒப்படை செய்வதற்கு எங்கெங்கு தகுதியுள்ள நிலங்கள் உள்ளனவோ, அந்த இடங்களிலெல்லாம் பட்டா வழங்கப்பட்டு வருகிறது. குறிப்பாக,* Regularisation of Encroachment Scheme *என்கின்ற அடிப்படையிலே, ஏற்கெனவே மக்கள் சென்று குடியிருப்புகளை உருவாக்கிக் கொண்டிருக்கின்ற இடங்களிலே, அந்த இடங்களினுடைய தன்மை; வகைப்பாடு* (classification) *ஆகியவற்றின் அடிப்படையில் பட்டா வழங்கப்படுகிறது. அது நீர்நிலைகளாகவோ அல்லது ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்களாகவோ இருக்கின்றபோது, அவற்றை முழுமையாக ஆய்வு செய்து, அந்த இடங்களில் தர முடியாதபட்சத்தில், மாற்று இடங்களை வழங்க மாவட்ட ஆட்சியருக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. வருவாய் (நிலை) ஆணை எண் 21 (6)–ன்கீழ், மாற்று இடம் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு வழங்கப்படுகிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 50 ஆண்டுகளுக்கு மேலே அவர்கள் அங்கே இருக்கின்றனர் என்று சொல்கின்றார். அப்படியென்றால், அந்த நிலத்தினுடைய வகைப்பாடு,* (classification) *என்ன என்பதை ஆய்வு செய்து, தகுதியிருக்கிறபட்சத்தில் அரசு விதிகளுக்குட்பட்டு வருமேயானால், அவர்களுக்குப் பட்டா வழங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும், அப்படி அது தகுதியுள்ள இடமாக இல்லாதபட்சத்தில், மாற்று இடம் ஆய்வு செய்து வழங்கப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*